Kerala Gazette No. 34 dated 25th August, 2020.
**PART I** **Section iii**

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-டி) துறை

அறிக்கை

எண் 23963/ச. இ. டி. 2/2017/சட்டம்.

2018 பிப்ரவரி 12
திருவனந்தபுரம், 1193 மகரம் 24
1940 சைத்ரம் 23.

கேரள மாநில சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2018 ஏப்ரல் 7-ம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்ட செயலாளர்.*

2018-ன் அவசரச்சட்டம் எண் 10

## 2018-ன் கேரள சாலை பாதுகாப்பு அதிகாரம குழும (திருத்த) சட்டம்

2007-ன் கேரள சாலை பாதுகாப்பு குழும சட்டத்தை திருத்தம் செய்வதற்குரிய ஒரு சட்டம்.

முகவுரை.—2007-ன் கேரள சாலை பாதுகாப்பு அதிகார குழும சட்டம் (2007-ன் 8) இதற்குப் பின்வரும் தேவைகளுக்காக திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாவது ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த சட்டம் 2018-ன் கேரள சாலை பாதுகாப்பு அதிகார குழும (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2017 நவம்பர் 21-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

3. <u>பிரிவு 9-ல் திருத்தம்.</u>—2007-ன் கேரள சாலை பாதுகாப்பு அதிகார குழும சட்டத்தில் (2007-ன் 8) (இதற்க பிறகு முதன்மை சட்டம் என்று குறிப்பிடப்படும்) பிரிவு 9-ற்கு பதில் பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும், அதாவது,-

"9. <u>சாலை பாதுகாப்பு கமிஷனர்.</u>—அரசிற்கு, இந்த சட்டத்தின் தேவைக்காக, அகில இந்திய சர்வீஸ்சில் இருந்து அரசு செயலாளரினுடையவோ இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸிசினுடையவோ அல்லது முதன்மை காட்டிலாக்கா அதிகாரியினுடையவோ பதவிக்கு குறையாத ஒரு அதிகாரியை முழு நேர சாலை பாதுகாப்பு கமிஷனராக டெப்புடேஷன் சேவை நிபந்தனையில் நியமனம் செய்யலாம்".

4. <u>இரத்தாதலும் தவிர்த்தலும்.</u>—(1) 2018-ன் கேரள சாலை பாதுகாப்பு அதிகார குழும (திருத்த) அவசரச்சட்டம் (2018-ன் 5) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்டிருப்பினும், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின்கீழ் செய்ததோ செய்ததாக கருதப்படுவதோஆன ஏதேனும் காரியமோ எடுத்ததோ எடுத்ததாக கருதப்படுவதோஆன நடவடிக்கையோ இந்த சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மை சட்டத்தின்கீழ் செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்படவேண்டியதாகும்.